**தெவிநுவர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 09 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 17 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தெவிநுவர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 205,500 கட்டட வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை பதிவேட்டு மீதிகள் பேரேட்டுக் கணக்கு மீதிகள் இடையே சமமின்மை களை அகற்றுவதற்காக உரிய சீராக்கல்களும் மீளாய்வாண்டு நாட்குறிப்பு இலக்கம் 21 இன் மூலம் ஒரே தடவையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகள் இடையே காணப்பட்ட ரூபா 6,724,721 இற்கான வித்தியாசத்தை இனங்காணாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 2,896,755 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமமின்மைகளை அடுத்த ஆண்டு சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டிற்கான பொழிப்பு வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,267,628 தொகையான வீதவரி மற்றும் வரி வருமானம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,900,028 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், வீதவரி வருமானம் ரூபா 632,400 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை, நடைமுறை மற்றும் முற்பெறுவனவுக்காக நிலுவை 03 நிரல்கள் பேணப்பட்டமையால் ஏற்பட்ட வழுவாகும். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 113,789 இனால் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 11,231,221 தொகைக்கான 02 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 896,123 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளில் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து அடுத்த வருடம் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது அட்டவணைகளுடன் சமர்ப்பிப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 126,518,671 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் சமநிலைப்படுத்தி கூட்டுத் தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்யப் பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வைப்புப் பதிவேடு மாதாந்தம் சமநிலைப் படுத்தப்பட்டு பிரதான பேரேட்டு மீதியுடன் இனக்கஞ் செய்து முறைப் பிரகாரம் பேணப்பட்டு வந்தது. |
| (ii) விதி 177 | கேள்வி அழைக்கப்படாமல் எசல விழாவிற்கு தற்காலிக கடைகள் மற்றும் நிலத் துண்டுகள் வழங்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் போது கேள்வி நடைமுறையை கடைபிடிக்க திட்டமிட்ட போதிலும் முதலமைச்சின் கட்டளை மட்டும் குழுவின் பரிந்துரை யின் படி அந்த நடைமுறை இடைவெளியில் நிறுத்துவதற்கு நேரிட்டது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 938,554 தொகைக்கான செலுத்த வேண்டிய பிடிபண மீதிகள் 174 தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பிரமாணங் பளின் படி செயற்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) நி.பி. 1646 | சபைக்குச் சொந்தமான 20 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் உரிய ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | இலக்கம் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான இரண்டு கப் வண்டிகளின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எரிபொருள் எரிவுப் பரிசோதனை எதிர் காலத்தில் மேற் கொள்வேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,245,653 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,370,631 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,499,983 | 2,902,626 | 2,469,962 | 4,351,359 | 2,259,839 | 5,662,880 | 5,906,246 | 3,918,695 |
| வாடகை | 23,588,050 | 20,514,087 | 18,487,926 | 11,189,509 | 20,013,272 | 22,551,481 | 23,094,744 | 9,163,348 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 4,215,350 | 5,205,966 | 5,105,266 | 100,700 | 3,949,486 | 860,113 | 860,113 | -- |
| ஏனைய வருமானங்கள் | 31,292,000 | 37,431,875 | 15,839,840 | 87,732,673 | 21,188,620 | 65,059,111 | 52,844,873 | 66,140,638 |
| மொத்தம் | 61,595,383 | 66,054,554 | 41,902,994 | 103,374,241 | 47,411,217 | 94,133,585 | 82,705,976 | 79,222,681 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 3,936,164 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,995,992 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் (தண்டத்துடன்) ரூபா 5,932,156 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,580,797 தொகை கொண்டிருந்தமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 4,351,359 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) வீதவரி அறவிடுதல் கணனி மயப்படுத்தப்பட்டு மென்பொருள் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 5,409,430 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான மொத்த அறவீடு ரூபா 1,315,756 தொகை மற்றும் வழங்கியிருந்த கழிவு ரூபா 66,586 என்பவற்றை கழித்த பின்னர் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,027,094 தொகை நிலுவையாக காணப்பட்ட போதிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணனி அச்சுப் பதிவுகளின் பிரகாரம் காட்டக் கூடிய நிலுவை ரூபா 3,755,494 தொகையாக இருந்தமையால், ரூபா 251,600 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | விரைவாக வித்தியாசத்தை இனங் கண்டு சீராக்கல் செய்ய வேண்டும். | சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 58,686 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,641 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 65,327 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடு ரூபா 2,130 தொகையாக இருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 63,197 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலுவை வாடகை ஆரம்ப மீதி ரூபா 9,100,843 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,722,964 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 13,823,807 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள் ரூபா 3,528,957 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ரூபா 10,294,850 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவீடு செய்வதற்காக இணக்க சபைக்கு சமர்ப்பித்து எதிர்காலத்தில் நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | தெவிநுவர பிரதேச சபை 105 கடைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு கொடுத்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,010,251 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 59,000 இனை விட மிகையான தொகை கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த 08 கடைகளில் இருந்து ரூபா 736,168 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,299,254 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 85,565,090 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக இடையிடையே விண்ணப்பித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தின் மாதாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய மற்றும் உக்காத குப்பைகள் சுமார் 90 தொன்கள் மாத்தறை பிரதேச சபைக்கு சொந்தமான சதுப்பு நிலம் ஒன்றில் குவிக்கப்பட்டு வருகின்றது. | முறைப் பிரகாரம் குப்பைகள் குவிக்கப்பட வேண்டும். | தற்போது உக்கக் கூடிய குப்பைகள் மற்றும் உக்காத குப்பைகள் என வகைப்படுத்தப் பட்டு சேகரிக்கப்படுவதுடன், உக்கக் கூடிய குப்பைகள் மாத்திரம் குவிக்கப்படுகின்றது. |

### (ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டின் றுஹுணு உதானய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கந்தர சுகாதார நிலையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக விவசாய அமைப்பொன்று சாட்டப் பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் 26 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட தென வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு, ரூபா 1,271,174 தொகை செலுத்தப் பட்டிருந்த போதிலும், 2020 பெப்ரவரி 28 திகதி அளவில் வேலை பூர்த்தி செய்து பயன்படுத்தியிருக்கவில்லை. | நிர்மாண வேலையை விரைவாக பூர்த்தி செய்து ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிக்காக ஈடுபடுத்த வேண்டும். | சபைக்குக் கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகள் இந்த செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு போதியளவாக காணப்படாமையால், ஏற்பாடுகள் கிடைத்தவுடன் இந்த செயற்திட்டத்தை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெவிநுவர எசல சல்பில தற்காலிக கடைகள் மற்றும் காணித் துண்டுகள் வாடகை அடிப்படையில் வழங்கும் போது முறையான திட்டம் ஒன்றின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருக்காததுடன், 5 வருடங்களுக்கு முன்னர் நிலைமை களை கவனத்தில் எடுத்தமையால் புதிதாக பெறுவோருக்கு கடைகள் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் இழந்த காரணத்தினால் 112 கடைகளில் இருந்து ரூபா 2,332,150 இற்கான வருமானம் ஒன்று சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | முறையான திட்டம் ஒன்று தயாரித்து உரிய முறையில் வாடகைக்கு கொடுக்கப்பட வேண்டும். | முறையான திட்டம் ஒன்றின் கீழ் எசல சல்பில வளவில் தற்காலிக கடை மற்றும் காணித் துண்டுகள் ஒதுக்க முடியாதுள்ளதுடன், பல்வேறு காரணங்களினால் அதனை மாற்றுவதற்கு நேரிடுகின்றது. மேலும் நாட்டில் காணப்பட்ட சூழ்நிலை காரணமாக சல்பில வளவில் கடைகளை விற்பனை செய்ய முடியாத ஆபத்து நிலைமை காணப்பட்டது. |
| 2019 ஆண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காத 28 நிறுவனங்களில் இருந்து சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன், அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டணம் ஆக ரூபா 196,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தகைமைகளை பரிசோதனை செய்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 37 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப்படுத்துவதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கும் மிகை பதவியணியை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | சேர்க்கப்பட்டிருந்த சுகாதார மற்றும் பாதை தொழிலாளர்கள் உரிய கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்படாமை, பிரதியீட்டு அடிப்படையில் மீண்டும் ஊழியர்கள் சேர்க்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,613,760 இற்கான மேலதிகச் செலவு ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது. | உரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எசல சல்பில விடயங்கள் தொடர்பாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய 84 தற்காலிக கடைகள் மற்றும் நிலத் துண்டுகளில் இருந்து ரூபா 2,026,800 இற்கான கடை வாடகை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | விற்பனை செய்யப்படாது காணப்பட்ட ஏனைய அனைத்து கடைகள் மற்றும் காணித் துண்டுகளில் அனுமதியின்றி தங்கியிருந்த அங்காடி வியாபாரிகளை நிரந்தரமாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 150(1) பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற 97 வர்த்தகங்களில் இருந்து 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 90,850 இற்கான வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய 95 வர்த்தகங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த 33 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 145,050 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விரைவாக கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய 33 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான டெரெக்ஸ் 820 பெகோ இயந்திரத்திற்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த விபத்தின் போது பின்புறத்திலுள்ள பக்க கண்ணாடி உடைந்திருந்ததுடன், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட நபர்களிடம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (உ) | தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபசஅ/5/6/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 5 ஆவது பிரிவின் பிரகாரம் 49 கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடை வாடகை, பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளின் படி உடன்படிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கடிதத்தின் மூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஞாபகமூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டன. |